THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

Calender : **CC.26/2020** **PW.1**
Miscellaneous :
Preliminary Register :

STATEMENT OF WITNESS
Name : வீரபாண்டியன்
Father's Name : பொன்னுசாமி
Village :
Taluk :
Calling :
Religion :
Age : Date:14.09.2022

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**முதல் விசாரணை** :-

**1.** நான் மாவடி ராமசந்திராபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். (**சாட்சி எதிரியை பார்த்து தெரியும் என்று அடையாளம் காட்டுகிறார்**). நான் எப்போதும் திருக்குறுங்குடி பெரியகுளம் இறக்கத்தில் உள்ள முப்பந்தல் இசச்சியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிட வருவது வழக்கம். 2020-ம் வருடம் ஒரு நாள் நான் பெரியகுளம் இறக்கத்தில் உள்ள முப்பந்தல் இசச்சியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிட வந்தேன். ஆஜர் எதிரி என்னிடம் வாழைகன்று பார்த்து தர என்னை அழைத்தார். நான் அதனால் அவருடம் அவர் இருசக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து நாங்கள் சாலைபுதூருக்கு சென்றோம்.

2. நாங்கள் அவ்வாறு சாலை புதூருக்கு சென்றவிட்டு தெற்கு நோக்கி இசக்கியம்மன் கோவிலுக்கு வந்து கொண்டிருந்தபோது எதிரி வேகமாக பைக்கை ஓட்டி வலதுபுறம் திடீரென்று திருப்பிவிட்டார். நான் கீழே விழுந்துவிட்டேன். விழுந்த வேகத்தில் எனக்கு வலது இடுப்பில் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததால் நான் மயக்கமடைந்துவிட்டேன். நான் கண் விழித்து பார்த்தபோது களக்காடு சொக்கலிங்கம் மருத்துவமனையில் சிகிட்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தேன். எனக்கு வலது இடுப்பில் தற்போது பிளேட் பொறுத்தப்பட்டுள்ளது. என்னிடம் போலீசார் சிகிட்சையில் இருந்தபோது போலீசார் புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான் சென்ற

இருசக்கர வாகனத்தின் எண் எனக்கு தெரியாது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை.**

THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

Calender : **CC.26/2020** **PW.2**
Miscellaneous :
Preliminary Register :

STATEMENT OF WITNESS
Name : **பன்னீர் செல்வம்**
Father's Name : சிவன்
Village :
Taluk :
Calling :
Religion :
Age : Date:14.09.2022

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**<u>முதல் விசாரணை</u>** :-

**1.** நான் கட்டளைபுது தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் பெரியகுளம் இறக்கத்தில் உள்ள முப்பந்தல் இசச்சியம்மன் கோவிலில் நான் பூசாரியாக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். (**சாட்சி எதிரியை பார்த்து தெரியும் என்று அடையாளம் காட்டுகிறார்**). **அ.சா.1 ஐ** எனக்கு தெரியும். **அ.சா1** எப்போதும் திருக்குறுங்குடி பெரியகுளம் இறக்கத்தில் உள்ள முப்பந்தல் இசச்சியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிட வருவது வழக்கம். அ.சா.1 வாழைகண் வியாபாரமும் பார்ப்பார். எதிரி அ.சா.1 யிடம் வாழைக்கண் ஒரு இடத்தில் சென்று பார்த்துவிட்டு வரலாம் என்று அ.சா.1 ஐ 02.01.2020 தேதி மதியம் 11 முதல் 11.30 மணிக்குள் இருக்கும் எதிரி தனது இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றார்.

2. இருவரும் எதிரி ஓட்ட அ.சா.1 பின்னால் அமர்ந்திருந்து மறுபடியும் பெரியகுளம் இறக்கத்தில் உள்ள முப்பந்தல் இசச்சியம்மன் கோவில் அருகே அ.சா.1 ஐ விடுவதற்காக வந்தபோது ரோட்டை கடந்து கோவிலுக்கு வரவேண்டும் என்பதால் எதிரி தனது இருசக்கர வாகனத்தை வந்து திருப்பும் போது அவர் பின்னால் வந்த கார் ஒன்று எதிரி ஓட்டிவந்த வாகனத்தின் பின்னால் மோதிவிட்டது அதனால் இருவரும் நிலை தடுமாறி இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டார்கள். எதிரிக்கு சிறிதளவு காயம் ஏற்பட்டிருந்தது. அ.சா.1 க்கு இடுப்பில் உள்ள எலும்பு முறிந்துவிட்டது. தற்போது அ.சா.1 க்கு இடுப்பில் பிளேட் பொறுத்தப்பட்டுள்ளது.

3. நான் அ.சா.1ன் குடும்பத்தினருக்கு விபத்து குறித்து போன் மூலம் தகவல் கொடுத்தேன். அ.சா.1ன் குடும்பத்தினர் சம்பவ இடத்திற்கு உடனே வந்துவிட்டார்கள். அ.சா.1 ஐ அவர்கள் களக்காடு சொக்கலிங்கம் மருத்துவமனையில் சேர்த்தார்கள். எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் எண் எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை.